# சென்னைப் பல்கலைக்கழகம்

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகத்திற்கு(சேப்பாக்கம்/மெரினா/கிண்டி/தரமணி /சேத்துப்பட்டு) இரவு/பகல் பாதுகாவலர் பணிக்கு சென்னையை மையமாக வைத்து இயங்கும் பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட இரு உறைகள் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அதற்காக தயார் செய்யப்பட்ட விவரங்கள் அடங்கிய விண்ணப்ப அறிக்கையை **பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்** (**The Registrar**, **University of Madras**) என்ற முகவரிக்கு விண்ணப்பக் கட்டணமாக ரூ.9000/- க்கான (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) கேட்பு வரைவோலையும் (DD) மற்றும் **வணிக வரித்துறை அதிகாரி** (**CTO, TDS Circle, Chennai – 6**) என்ற முகவரிக்கு ரூ.450/- க்கு (ரூபாய் நானூற்றி ஐம்பது மட்டும்) கேட்பு வரைவோலையும், எடுத்து செயற் பொறியாளர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை – 600005 அவர்களிடம் **24-04-2017** மாலை 5.00 மணிக்குள்ளாக ஒப்படைத்து ஒப்பந்தப்படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும். ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் பொழுது அதறக்கான காப்பீட்டு தொகையாக ரூ.50,000/- க்கான (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்** (**The Registrar**, **University of Madras**) என்ற முகவரிக்கு கேட்பு வரைவோலை வைத்து உறையின் மேல் "சென்னைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகத்தற்கு(சேப்பாக்கம்/மெரினா/கிண்டி/தரமணி /சேத்துபட்டு) இரவு/பகல் பாதுகாவலர் பணிக்கு" என்று குறிப்பு எழுதி மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பத்தைப் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் **25-04-2017** மாலை 3.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் அன்று மாலை 4.00 மணிக்கு திறக்கப்படும். இந்த ஒப்பந்தப்புள்ளியில் தேர்வு பெறாதவர்களுக்கு அவர்களின் முன்வைப்புத் தொகை எந்தவித வட்டியுமில்லாமல் திரும்ப வழங்கப்படும்.

எண். F7/Bldgs/SS/2017/103 06-04-2017 பதிவாளர் i/c.

சேப்பாக்கம், சென்னை – 5.